# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடம்

## நிர்வாக உத்தியோகத்தர்கள் - நிரந்தர அடிப்படை

### இரத்மலான வளாகம்

1. உதவிப் பதிவாளர் பதவி
2. உதவிப் பதிவாளர் பதவி (சட்டம் மற்றும் சட்ட ஆவணங்களை தயாரித்தல்)

### சூரியவெவ தெற்கு வளாகம்

3. உதவிப் பொருளாளர் பதவி

**சம்பள அளவுத் திட்டம்**

- உதவிப் பதிவாளர், உதவிப் பொருளாளர், மற்றும் உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணம்):-

U-EX I (II) ரூ.50,625 - 3x1,125 - 54,000 (EB) 55,335; 12x1,335 - 71,355 p.m. + (ரூ.17,800 வாழ்க்கைச்செலவு படி + ரூ.5,000 மாதாந்த கொடுப்பனவுகள + 45% MCA + 20% மேலதிக கொடுப்பனவுகள்)

**ஆட்சேர்ப்பு முறை**

பரீட்சை பெருபேறுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் (Interview) மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**ஏனைய பிரதிபலன்கள்**

தகுதியான பதவிகளுக்கான ஓய்வுக்கால விடுமுறை, கல்விக் கொடுப்பனவுகள் மற்றும் ஆராய்ச்சி கொடுப்பனவுகள், EPF, ETF, பணிக்கொடை தொகை, இலவச சுகாதாரக் காப்புறுதி, வருடாந்த ஊக்குவிப்பு தொகை, ஊழியர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்கள், பல்கலைக்கழக வைத்தியசாலையில் சிகிச்சையில் முன்னுரிமை, நலன்புரி போக்குவரத்து மற்றும் ஏனைய சலுகைகள்.

**பொது நிபந்தனைகள்**

1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ ஆணைக்குழு சபையினால் ஒவ்வொரு பதவி / தரத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களுக்கு மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்படும்.
3. விண்ணப்பதாரிகளால் இணையத்தளத்தில் **(www.kdu.ac.lk)** இருந்து பதிவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி தொடர்புடைய உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2024.09.23** ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும்.
4. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடல் வேண்டும்.
5. **விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.**
6. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / நீதிச் சட்ட சபைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனத்தில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனத்தின் பிரதானி மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
7. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொண்ட விண்ணப்பப்படிவத்தின் மூலமாக மாத்திரம் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பிந்திக்கிடைக்கும், பூரணப்படுத்தப்படாத அல்லது மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனை இல 06 இற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. விண்ணப்பத்தின் இறுதித் திகதியில் விண்ணப்பதாரர்கள் தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
9. தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முக / செயன்முறை பரீட்சை மற்றும் தகுதித் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
10. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
11. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு பதவிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளின்படி மற்றும் செயன்முறை பரீட்சை / தகுதித் தேர்வு மற்றும் நேர்முக பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தேர்வுகள் நடைபெறும்.
12. தகுதித் தேர்வு / கட்டமைப்பு பரீட்சை மற்றும் / அல்லது நேர்முக பரீட்சைக்கு மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் உரிமையை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.
13. UGC னால் வெளியிடப்பட்ட சமீபத்திய சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். மேலும் UGC னால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
14. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. இந்த நியமனம் மூன்று (03) வருடங்களுக்கு தகுதிகாண் காலமாக இருக்கும்.
15. விண்ணப்பதாரர்கள் UGC சுற்றறிக்கைகளை தகுதிகள் தொடர்பான சிறப்பு குறிப்புகளுக்கு பொருத்தமான திருத்தங்களுக்கும் மற்றும் பொருத்தமான தகுதிகளுக்கு KDU இணையதளத்தைப் பார்க்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- உதவிப் பதிவாளர் பதவி }
- உதவிப் பொருளாளர் பதவி } - UGC Commission Cir. No. 15/2017
- உதவிப் பதிவாளர் பதவி (சட்டம் மற்றும் சட்ட ஆவணங்களை தயாரித்தல்) - UGC Commission Cir. No. 948

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**

பதிவாளர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
இரத்மலானை 10390,
இலங்கை.

**இறுதித்திகதி**
**2024.09.23**

**மேலதிக விபரங்களுக்கு பிரவேசிக்கவும் www.kdu.ac.lk**

SELACINE
tamilguru.lk